 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

# மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2025
## 3rd Term Exam – 2025

| விவசாயமும் உணவுத்தொழில்நுட்பவியலும் | Grade 10 | T | 81 | மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம் |
|---|---|---|---|---|

அறிவுறுத்தல்:

1. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக**.
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி ( X )** இடுவதன் மூலம் காட்டுக.
5. **கணிப்பான்களைப் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது.**

### பகுதி I

01) "நிலத்தில் விழும் ஒரு துளி நீரையேனும் மனித தேவைக்குப் பயன்படாமல் வீணாகக் கடலில் சேர இடமளியேன்" எனும் கூற்றைக் கூறிய மன்னன்,
1. மகாசேனன் 2. பராக்கிரமபாகு 3. வசபன் 4. தாதுசேனன்

02) பின்வருவனவற்றுள் பசுமைப்புரட்சி காரணமாக விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றமாக அமையாதது,
1. விவசாய இரசாயனங்களின் பாவனை அதிகரிக்கப்பட்டது.
2. விவசாய இயந்திரங்களின் பாவனை அதிகரிக்கப்பட்டது.
3. ஒரு போகத்தில் மாத்திரம் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.
4. தானிய உற்பத்தி இரு மடங்காக அதிகரிக்கப்படல்.

03) வருடாந்த மழைவீழ்ச்சி அளவு, மழைவீழ்ச்சிப் பரம்பல் ஆகிவற்றின் அடிப்படையில் இலங்கை பிரிக்கப்பட்டுள்ள காலநிலை வலயங்களாவன:
1. ஈரவலயம், உலர்வலயம், இடைவலயம்
2. ஈரவலயம், தாழ்நாட்டு ஈரவலயம், தாழ்நாட்டு உலர்வலயம்.
3. மேல்நாடு, மத்தியநாடு, தாழ்நாடு
4. மேற்கூறிய யாவும் பிழை

04) ஒளிச்செறிவை அளவிடும் அலகு,
1. மணித்தியாலம் 2. சதவீதம் 3. மில்லிமீற்றர் 4. லக்ஸ்

05) இலங்கைக்கு வடகீழ்ப் பருவப்பெயர்ச்சி மழை, தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி இழை கிடைக்கும் காலப்பகுதிகள் முறையே,
1. மார்ச் - ஏப்ரல், மே – செப்ரெம்பர்
2. டிசம்பர் - பெப்ரவரி, மே – செப்ரெம்பர்
3. மே – செப்ரெம்பர், டிசம்பர் - பெப்ரவரி
4. ஏப்ரல் - மே, டிசம்பர் - பெப்ரவரி

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

06) பயிர்ச்செய்கையில் மழைவீழ்ச்சியின் பாதகமான செல்வாக்காக அமையாதது,

1. குறைந்த மழைவீழ்ச்சியால் வித்துக்கள் முளைக்காது.
2. அதிக மழை காரணமாக பூக்கள், மகரந்தங்கள் கழுவிச் செல்லப்படல்.
3. அதிக மழை வீழ்ச்சி காரணமாக பயிர்கள் பாட்டத்தில் சாய்தல்.
4. நிலம் பண்படுத்தலுக்கு ஓரளவு ஈரலிப்பு தேவை.

07) தாவரங்களால் அகத்துறிஞ்சப்படும் மண்ணீர் வகை,

1. பருகுநீர்
2. மயிர்த்துளைநீர்
3. புவியீர்ப்பு நீர்
4. மேற்கூறிய யாவும்

08) மாணவனொருவன் பாடசாலைத் தோட்டத்தில் மண் மாதிரியை எடுத்து நீர் சேர்த்து உருண்டைகளாக்கி பின் உள்ளங்கையில் வைத்து உருளையாக்கி மோதிரவடிவம் ஆக்கும்போது உடைந்தது எனின் அம் மண் மாதிரியின் இழையமைப்பு,

1. மணல் மண்
2. மணல் இருவாட்டி மண்
3. களி இருவாட்டி மண்
4. களி மண்

09) மண்ணின் நிறத்தைத் துணிவதற்கு பயன்படுத்தும் காட்டி,

1. pH தாள்
2. மன்சல் மண்ணிற அட்டவணை
3. pH மானி
4. சாரீரப்பதன் அட்டவணை

- **மண் பக்கப்பார்வைப் படம் ஒன்று அருகே தரப்பட்டுள்ளது. படத்தை அவதானித்து 10, 11 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**




10) தாய்ப்பாறை சிதைவடைந்து உருவாகும் தாய்ப்பாறைப் பொருளைக் கொண்ட படை,

1. படை A  2.. படை B  3. படை C  4. படை R

11) சேதனப் பதார்த்தங்களை அதிகளவில் கொண்ட படை,

1. படை A  2. படை B  3. படை C  4. படை R

12)

| குடும்பம் | A | B | C | D |
|---|---|---|---|---|
| சொலனேசியா | கத்தரி | வெண்டி | பருத்தி | வற்றாளை |
| பபேசியே | உழுந்து | கடலை | பயறு | பயற்றை |
| அரிக்கேசியே | மிளகாய் | உருளைக்கிழங்கு | தக்காளி | கறிமிளகாய் |
| பொயேசியே | சோளம் | வெங்காயம் | நெல் | இஞ்சி |

தாவரக் குடும்பங்களை உள்ளடக்கிய மேற்தரப்பட்ட அட்டவணையில் A, B, C, D பயிர்களை உள்ளடக்கிய சரியான தொகுதி பின்வருவனவற்றுள் எது?

1. சொலனேசியா
2. பபேசியே
3. அரிக்கேசியே
4. பொயேசியே

13) இயந்திரவலுவால் இயக்கப்படும் முதற் பண்படுத்தல் உபகரணம்,

1. மண்வெட்டி
2. கைமுள்ளு
3. வட்டத்தட்டுக்கலப்பை
4. சுழல் கலப்பை

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

14) வரம்பு சால் பாத்தியில் நாட்டுவதற்குப் பொருத்தமான பயிர்கள்,

1. வற்றாளை, நிலக்கடலை
2. அன்னாசி, றம்புட்டான்
3. எள்ளு, நெல்
4. சோளம், நெல்

15) தென்னைப் பயிர்ச்செய்கையில் நடுகைக் குழியின் அளவு cm இல்,

1. $60 \times 60 \times 60$
2. $90 \times 90 \times 90$
3. $30 \times 30 \times 30$
4. $45 \times 45 \times 45$

16) நாற்றுமேடைக்குப் பயன்படுத்தப்படும் நாற்றுமேடை ஊடகக்கலவையான மேல்மண், கூட்டெருவிற்கான விகிதம்,

1. 2 : 1
2. 1 : 2
3. 1 : 1
4. 1 : 3

17) பின்வரும் வரிப்படத்தில் நாற்றுமேடைப்பாத்திகள் இரண்டின் குறுக்கு வெட்டுமுகம் தரப் பட்டுள்ளது. A, B, C, D ஆகியவற்றின் சிபார்சு செய்யப்பட்ட அளவுகள் முறையே cm இல்,




1. 100, 30, 5, 10
2. 80, 30, 20, 5
3. 100, 30, 10, 5
4. 30, 80, 5, 20

18) வேர்த்தொகுதிக்கு பாதிப்பு ஏற்படாமல் மண்ணுடன் சேர்த்து நாற்றை பெயர்த்து நடும் முறை,

1. சாடி நாற்றுமேடை
2. நெரிடோக்கோ நாற்றுமேடை
3. தட்டு நாற்றுமேடை
4. பாத்தி நாற்றுமேடை

19) வித்துக்களை நாட்டுவதற்கு முன்பு நாற்றுமேடை கிருமியழிப்பதன் நோக்கம்,

1. வித்துக்கள் முளைத்தலை இலகுபடுத்தல்.
2. பீடைத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தல்.
3. மண்ணின் நீர்வடிப்பை மேம்படுத்தல்.
4. தாவர போசணை கிடைப்புத் தன்மையை அதிகரித்தல்.

20) நாற்றை வன்மைப்படுத்தலில் உள்ளடங்கும் செயற்பாடு,

1. அடிக்கடி நாற்றுமேடைக்கு நீர்ப்பாசனம் செய்தல்.
2. நாற்றுக்களைப் பிடுங்க முன் ஒரு நாள் முன்பதாக பீடைநாசினி தெளித்தல்.
3. சூரிய ஒளி படும் மணித்தியாலங்களை படிப்படியாக அதிகரித்தல்.
4. நீர்ப்பாசனம் மூலம் திரவப் பசளையை நாற்றுமேடைக்கு பிரயோகித்தல்.

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

21) அதிகளவு நீர் தேவைப்படும் நீர்ப்பாசன முறை,

1. பரவல் பாசனம்
2. பாத்திப் பாசனம்
3. துளிப் பாசனம்
4. தூவல் பாசனம்

22) மண்ணிலிருந்து நீர் வெளியேறும் முறை அல்லாதது?

1. ஆவியாதல்
2. ஆவியுயிர்ப்பு
3. மழைவீழ்ச்சி
4. ஓடி வடிதல்

23) காற்று வீசும் பிரதேசத்திற்குப் பொருத்தமான வினைத்திறனான நீர்ப்பாசன முறை,

1. சால் முறை
2. பரவல் முறை
3. துளி முறை
4. தூவல் முறை

24) 


தரப்பட்ட அமைப்பில் உள்ள வடிகால் தொகுதியாக அமைவது,

1. சமாந்தர முறை வடிகால்
2. கொடோல் வடிகால்
3. ஹெறிங்கின் மீன்முள்ளு முறை
4. ஓட்டு வடிகால்

25) நீர்வடிப்புக் குறையால் பயிர்ச் செய்கையில் ஏற்படத்தக்க நிலைமை,

1. பயிரின் வேர்த்தொகுதி ஆழமாக வளர்தல்.
2. பயிரில் வேர் சார்ந்த நோய்கள் குறைவடைதல்.
3. சேதனப் பதார்த்தங்கள் பிரிகையடைவதால் மெதேன் வாயு உருவாகுதல்.
4. காற்று வாழ் நுண்ணங்கிகளின் குடித்தொகை அதிகரித்தல்.

26) பின்வருவனவற்றுள் நுண்போசணை மூலகங்கள் கொண்ட தொகுதி,

1. காபன், ஐதரசன், ஒட்சிசன்
2. நைதரசன், பொசுபரசு, பொட்டாசியம்
3. காபன், நைதரசன், நாகம்
4. நாகம், செம்பு, மங்கனீசு

27) தாவரமொன்றில் முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமாக மாறி இருந்தன. இதற்குக் காரணமான போசணை மூலகம்,

1. N
2. P
3. J
4. S

28) யூரியாவில் அடங்கியுள்ள N இன் நூற்றுவீதம்,

1. 20%
2. 46%
3. 60%
4. 45%

29) பயிர்களை நாட்ட முன்னர் மண்ணுக்கு இடப்படும் பசளை வகை,

1. திரவப்பசளை
2. அடிக்கட்டுப்பசளை
3. மேற்கட்டுப்பசளை
4. மேற்கூறிய யாவும்

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

30) மண்ணுக்கு சேதனப் பசளை சேர்ப்பதன் முக்கியத்துவமாக அமைவது,

1. மண்ணின் நீர்ப்பற்றுதிறன் குறையும்.
2. மண்ணில் நுண்ணங்கி குடித்தொகை கூடும்.
3. மண்ணில் போசணை மட்டம் குறைவடையும்.
4. மண்ணின் கட்டமைப்பு சீர்குலையும்.

31) கூட்டெரு தயாரிப்பில் பழைய கூட்டெரு சிறிதளவு சேர்ப்பதன் நோக்கம்,

1. நீர் வடிப்பை மேம்படுத்தல்
2. நீர் பற்றுதிறனை அதிகரித்தல்
3. நுண்ணங்கித் தொழிற்பாட்டை அதிகரித்தல்
4. காற்றோட்டம் அதிகரித்தல்

32) பின்வருவனவற்றுள் ஆக்கிரமிப்புக் களைகள்,

1. பாதினீயம், விடேலியா
2. கோரை, அறுகு
3. குப்பைமேனி, முட்கீரை
4. பாதினீயம், சிறுகோரை

33) தண்டு முக்கோண வடிவானதும் உள்ளடு கொண்டதுமான களை வகையாக அமைவது?

1. புல் வகைக் களை
2. கோரை வகைக் களை
3. அகன்ற இலைக் களை
4. ஆக்கிரமிப்புக் களை

34) இலங்கையில் தடை செய்யப்பட்ட சர்வ களை நாசினி,

1. MCPA
2. ரூட்டோன்
3. அல்பேட் கலவை
4. பரக்குவாட்

35) தரப்பட்ட படத்தில் நோயறிகுறி ஏற்படுத்தும் நோயாக்கி,



1. பற்றீரியா
2. நெமற்றோடு
3. வைரசு
4. பங்கசு

36) சாடி ஒன்றில் மிளகாய்த் தாவரம் வாடிக் காணப்பட்டது.தாவரத் தண்டை வெட்டி நீருள்ள பாத்திரத்தினுள் அமிழ்த்தியபோது சளியம் வெளியேறியது. எனின் ஏற்பட்ட தொற்றுதலுக்கான நோய்க் காரணி,

1. பற்றீரியா
2. பங்கசு
3. வைரசு
4. பைற்றோப் பிளாஸ்மா

37) குடம்பிப் பருவத்தில் நெற்பயிரைத் தாக்கும் பீடை,

1. நெல் மூட்டைப் பூச்சி
2. கபிலத் தத்தி
3. தண்டுகோதி
4. கருவண்டு

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

38) பயிர்ச் செய்கையில் வெளியே இருந்து வரும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறை,

1. வெறுப்பூட்டும் பயிர்களை வளர்த்தல்.
2. சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
3. பீடைநாசினி பிரயோகித்தல்.
4. பயிர்ச்சுழற்சி மேற்கொள்ளல்.

39) நெற்பயிரில் பூ உருவாவதிலிருந்து முதிர்ச்சியடைய எடுக்கும் காலம்,

1. 30 நாட்கள்
2. 15 நாட்கள்
3. 45 நாட்கள்
4. 60 நாட்கள்

40) திருந்திய நெற்பேதங்களில் இயல்பாக அமைவது,

1. குறைவான விளைச்சல்
2. உயரமாக வளரும்
3. பசளைத் தூண்டற்பேறு குறைவு
4. நெல் : வைக்கோல் விகிதம் கூடியது

(40 × 1 = 40 புள்ளிகள்)

## பகுதி II

01) நஞ்சற்ற சமநிலையான ஓர் உணவு வேளையைப் பெற்றுக்கொள்ள தமது வீட்டுத் தோட்டத்தில் வெவ்வேறு உணவுப் பயிர்களை பயிர் செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

i) a. வீட்டுத் தோட்டத்தில் பயிரிடக்கூடிய சொலனேசியேக் குடும்பப் பயிர்கள் 2 தருக. (01 புள்ளி)

b. நேரடியாக வயலில் வித்து மூலம் நாட்டப்படும் பயிர்கள் 2 தருக. (01 புள்ளி)

ii) a. வீட்டுத் தோட்டத்தில் நிலம் பண்படுத்தும்போது மேற்கொள்ளும் இடைப் பண்படுத்தல் கருமங்கள் 2 தருக. (01 புள்ளி)

b. இடைப்பண்படுத்தலில் கையால் மேற்கொள்ளும் உபகரணங்கள் 2 தருக. (01 புள்ளி)

iii) a. பயிர்ச்செய்கையில் செல்வாக்குச் செலுத்தும் காலநிலைக் காரணிகள் 2 தருக. (01 புள்ளி)

b. மேற்கூறிய காலநிலைக் காரணிகளை அளவிடும் உபகரணங்களை முறையே குறிப்பிடுக. (01 புள்ளி)

iv) a. பொதுவாக பயன்படுத்தப்படும் பாத்தி நாற்றுமேடை வகைகள் எவை? (01 புள்ளி)

b. நாற்றுமேடையின் ஊடகக் கலவையைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

v) a. வீட்டுத்தோட்டத்தில் பயன்படுத்தக் கூடிய சூழலுக்கு உவப்பான பீடை நாசினிகள் 2 குறிப்பிடுக. (01 புள்ளி)

b. வீட்டுத் தோட்டத்தில் பயிர்களைத் தாக்கக் கூடிய பீடைகள் 2 தருக. (01 புள்ளி)

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

vi) a. மாபோசணை மூலகங்கள் 2 தருக. (01 புள்ளி)

b. பசுந்தாட் பசளையாகப் பயன்படுத்தப்படும் தாவரங்கள் 2 தருக. (01 புள்ளி)

vii) a. மிகப் பழைமை வாய்ந்த நீர்ப்பாசன முறை எது? (01 புள்ளி)

b. தரைக்கீழ் நீர்வடிப்பு முறைகள் 2 தருக. (01 புள்ளி)

viii) a. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அதிகம் பரம்பியுள்ள மண் வகை எது? (01 புள்ளி)

b. மண்ணினது அமிலத் தன்மையை நீக்கும் பதார்த்தம் 1 தருக. (01 புள்ளி)

ix) a. நாற்றுமேடையை தொற்று நீக்கும் முறைகள் 2 தருக. (01 புள்ளி)

b. பாத்தி நாற்று மேடையின் நியம அகலம் யாது? (01 புள்ளி)

x) a. தென்னை செய்கையை தாக்கும் பீடையின் பெயரைக் குறிப்பிடுக. (02 புள்ளி)

(20 புள்ளிகள்)

02) பயிர்ச்செய்கையில் செல்வாக்குச் செலுத்தும் காலநிலைக் காரணிகள் பற்றி அறிந்திருப்பது அவசியமானதாகும்.

i) எளிய மழைமானி




a. மேற் தரப்பட்ட உபகரணத்தின் பெயர் யாது? (01 புள்ளி)

b. இவ் உபகரணத்தில் A, B, C பகுதிளைப் பெயரிடுக. (03 புள்ளி)

ii) அதிக காற்றினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் 3 தருக. (03 புள்ளி)

iii) a. இலங்கைக்கு மழை கிடைக்கும் முறைகள் 3 தருக. (03 புள்ளி)

(10 புள்ளிகள்)

03) தாய்ப்பாறை சிதைவதால் உருவாகின்ற தாய்ப்பாறைப் பொருள் மேலும் சிதைவுக்கு உட்பட்டு மண் உருவாகின்றது.

i) a. இச் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்? (01 புள்ளி)

b. பாறை வகைகள் 2 தருக. (01 புள்ளி)

ii) a. மண்ணரிப்பு என்றால் என்ன? (02 புள்ளி)

b. மண்ணரிப்புக் காரணிகள் 2 தருக. (01 புள்ளி)

iii) a. பயிர்கள் நாட்டுவதற்கு பொருத்தமான பாத்தி வகைகள் 4 தருக. (02 புள்ளி)

b. நாற்றுமேடையை அமைப்பதற்கு இடத்தைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் 3 தருக. (03 புள்ளி)

(10 புள்ளிகள்)

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

04) நீர் வளம் பெறுமதி மிக்கதும் அது மனிதருக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் முக்கியமானதும் ஆகும்.

i) a. மண்ணிலிருந்து நீர் வெளியேறும் முறைகள் 4 தருக. (02 புள்ளி)
b. மண்ணுக்கு மூடுபடையாக பயன்படுத்தும் இயற்கையான பொருட்கள் 2 தருக. (01 புள்ளி)

ii) a. அதிகளவு நீர்த் தேவையுடைய பயிர் எது? (01 புள்ளி)
b. மேற்பரப்பு நீர்ப்பாசன முறைகள் 4 தருக. (02 புள்ளி)

iii) துளி முறைப் பாசனத்தின் அனுகூலங்கள் 4 தருக. (04 புள்ளி)

(10 புள்ளிகள்)

05) பயிர்ச் செய்கையில் எதிர்பார்த்த விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கு தாவர போசணை மூலகங்கள் குறைபாடின்றி சரியாக வழங்கப்படுதல் வேண்டும்.

i) a. சேதனப் பசளை வகைகள் 4 குறிப்பிடுக. (02 புள்ளி)
b. தாவரங்களின் வளர்ச்சிப் பருவத்தில் வழங்கப்பட வேண்டிய போசணை மூலகம் எது? (02 புள்ளி)

ii) சேதனப் பசளையை பயன்படுத்துவதன் முக்கியத்துவங்கள் 3 தருக. (03 புள்ளி)

iii) விவசாயிகள் இரசாயனப் பசளையைப் பிரயோகிப்பதால் ஏற்படும் தீமைகள் 3 குறிப்பிடுக. (03 புள்ளி)

(10 புள்ளிகள்)

06) பயிர்ச் செய்கையில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினையாக பீடைத்தாக்கம் காணப்படுகின்றது.

i) a. பீடைகளின் வகைகள் 3 குறிப்பிடுக. (03 புள்ளி)
b. களைகளின் பொது இயல்புகள் 2 தருக. (02 புள்ளி)

ii) நோய் முக்கோணியை வரைந்து பெயரிடுக. (03 புள்ளி)

iii) அடியழுகுதல் நோயின் நோய்க்கட்டுப்பாட்டு முறைகள் 2 தருக. (03 புள்ளி)

(10 புள்ளிகள்)

07) இலங்கையின் பிரதான உணவு நெல் அரிசிச்சோறு ஆகும்.

i) a. இலங்கையில் நெற் செய்கைக்கு உள்ள வாய்ப்புகள் 3 தருக. (03 புள்ளி)

ii) a. புராதன இலங்கையில் விவசாயம் நிலவியமைக்கான சான்றுகள் 2 தருக. (02 புள்ளி)
b. பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்கள் 2 தருக. (01 புள்ளி)

iii) a. நெற்செய்கையில் பாற்பருவத்தில் சாற்றை உறிஞ்சி பாதிப்பை ஏற்படுத்தும் பீடை எது? (01 புள்ளி)
b. நெற்செய்கைக்கான நாற்றுமேடை வகைகள் 2 தருக. (02 புள்ளி)

(10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi



Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library